# DEPOSITION OF WITNESS

## (CHAPTER OF XXV, CRIMINAL PROCEDURE CODE )
## IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUPPUR

**Case No. S.C. 12/2023**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | : | PW-9/Lw-14 |
| Name | : | Mr. Rajinikanth |
| Father Name | : | Kalimuthu |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.02.2026.

எதிரிகள் மற்றும் வழக்கறிஞர் ஆஜர்
**அழைப்பாணையின் பேரில் சாட்சி வரவழைக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்சமயம் திருப்பூர் மாநகரம் சிறப்பு நுண்ணறிவு பிரிவில் காவல் ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 21.12.2021 ஆம் தேதி 00.30 மணிக்கு திருப்பூர் மாநகர வடக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது திருப்பூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த கார்த்திகேயன் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தேன். தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலம் என்னால் பதிவு செய்யப்பட்டது. புகார் வாக்குமூலம் அ.சா.ஆ– 10. புகார் வாக்குமூலத்தின் பெயரில் திருப்பூர் வடக்கு காவல் நிலைய குற்ற எண். 2438/2021 ன் படி இ.த.ச சட்ட பிரிவு 341,294(பி),323, 307 ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு

செய்து தற்சமயம் என்னிடம் காண்பிக்கப்படும் முதல் தகவல் அறிக்கை என்னால் தயார் செய்யப்பட்டது. அச்சு அசல் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ– 11. முதல் தகவல் அறிக்கை ஒரு நகலை சம்பந்தப்பட்ட குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் முன்னிலைப்படுத்தினேன். அதன் ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு விசாரணைக்காக வைத்தேன். இதை பொறுத்து காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. புகாரில் முதல் எதிரி சுகன்ராஜ் புகார்தாரர் வீட்டிற்கு அருகில் உள்ள எத்தனை நபர்களிடம் எவ்வளவு தொகை வாங்கினார் என்ற விவரத்தை புகாரி சொல்லவில்லை என்றால் சரி. சம்பவ தேதிக்கு முன்பு எந்த தேதியில் புகார்தாரர் முதல் எதிரியின் வீட்டிற்கு சென்றார் என்ற விவரம் புகாரியில் சொல்லவில்லை என்றால் சரி. புகார் வாக்குமூலம் என்னால் எழுதப்பட்டதா என்றால் ஆமாம். புகார் வாக்குமூலத்தில் மூன்றாவது பக்கத்தில் கடைசி மூன்று வரிகள் என்னால் எழுதப்பட்டதா என்றால் ஆமாம். காவல் நிலையத்திற்கும் அரசு மருத்துவமனைக்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் மூன்று அரை கிலோ மீட்டர்.

2. மருத்துவமனைக்கு புகார்தாரர் 9.45 மணிக்கு சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார். நான் நான்கு மணி நேரம் கழித்து தான் மருத்துவமனைக்கு விசாரணைக்கு சென்றுள்ளேன் என்றால் சரி. அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் பெற்று அதன் பிறகு சென்றேன். புகாரில் குறிப்பிட்ட உள்ளவாறு ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிர்கள் மீது கொடுக்கப்பட்ட பொய் புகாரை விசாரணை செய்யாமல் தவறான முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிறக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d.கே.ஆர்.கண்ணன்
கூடுதல் உதவி அமர்வு நீதிபதி,
<u>திருப்பூர்.</u>